ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)(பொ) அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திருமதி.மா.வாணிலட்சுமி ஜெகதாம்பாள்

ப.மு.19398/2020/அ5 நாள்: 16.09.2020

பொருள் : பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - ஈரோடு மாவட்ட வருவாய் அலகு - பதிவறை எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் நிலையிலிருந்து இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற்றவர்களின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணி வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது

பார்வை :
01. ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.28441/2018/அ5 நாள்.06.01.2020.
02. ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.28441/2018/அ5 நாள்.21.02.2020.
03. வருவாய் வட்டாட்சியர், ஈரோடு, ந.க.1215/2020/அ4. நாள்.15.09.2020
04. வருவாய் வட்டாட்சியர், சத்தியமங்கலம், ந.க.36/2020/அ2, நாள்.15.09.2020
05. வருவாய் வட்டாட்சியர், பெருந்துறை, ந.க.1017/2019/ஆ1, நாள்.15.09.2020.

------------

**ஆணை :**

ஈரோடு மாவட்ட வருவாய் அலகில், பார்வை 01 மற்றும் 02-இல் காணும் செயல்முறை ஆணைகளின்படி, ஈரோடு மாவட்ட வருவாய் அலகில் 2019-2020 ஆம் ஆண்டுக்கு பதிவறை எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் போன்ற Feeder Category பணி நிலையிலிருந்து இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிமாற்றத்தின் மூலம் பதவி உயர்வு பெற்ற கீழ்க்கண்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்களது பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதிகளின் விதி 23(a)(i) ன்படி அவருக்கெதிரே குறிப்பிடப்பட்ட நாள் முதல் பணி வரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | இளநிலை உதவியாளார் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாள் | இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன் முறைப்படுத்தும் தேதி |
|---|---|---|---|
| 01. | பொ. சதீஷ்,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்ட அலுவலகம், ஈரோடு. | 06.01.2020<br>முற்பகல் | 06.01.2020<br>முற்பகல் |
| 01. | ஆர். வனிதா,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்ட அலுவலகம்,<br>சத்தியமங்கலம். | 06.01.2020<br>பிற்பகல் | 06.01.2020<br>பிற்பகல் |

(த.பிப.ா)

Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| 03. | ஆர். துளசிமணி,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்ட அலுவலகம்,<br>பெருந்துறை. | 21.02.2020<br>பிற்பகல் | 21.02.2020<br>பிற்பகல் |

மேற்காணும் விபரங்களை தனியர்களது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், மேற்காணுமாறு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்பட வேண்டும்.

ஒம்/- மா. வாணிலட்சுமி ஜெகதாம்பாள்
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
ஈரோடு.

/உண்மை நகல்/உத்திரவுப்படி/

16/9/2020

அலுவலக மேலாளர் (பொது)

16/9/2020

பெறுநர்
மேற்காணும் நபர்கள் உரிய வழிமுறையாக

நகல் : வருவாய் வட்டாட்சியர், ஈரோடு / சத்தியமங்கலம் / பெருந்துறை.

நகல் : அ5 முக்கிய ஆணைத்தொகுப்பிற்கு

Scanned with CamScanner